42 காலணா Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாரணிக் கெல்லா மெடுத்தோதுவோமே "


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

ACC-NO-10813

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நெ. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. சனி 6-5-33

அன்னையின் அருள் !



தாயே ! அதோ எரவாடாவில் உனது புதல்வன், எங்கள் தலைவன், மகத்தான விரத மொன்றை ஏற்றுக் கொண்டிருக்கிறான். தியாக நெருப்பில் அம்மகா புருஷன் நுழைந்ததும் ஆசி மழை பொழிந்து காக்க வேண்டியது அன்னையே உனது கடமை ! தேசமுழுதும் உனது குழந்தைகள் செய்யும் பிரார்த்தனைக்கு இரங்குவாயாக ! வந்தே மாதரம்.

உபவாசத்திற்கு முன்

"அன்று இரவு ஆகாயத்திலுள்ள ஜோதி மயமான நட்சத்திரங்களையும், கிரகங்களையும் இயற்கை யன்னையின் திருவிளையாடல்களையும் அண்ணாந்து பார்த்துப் படுத்துக்கொண்டிருந்த போது காந்திஜியின் மனம் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தது. தூக்கமோ பிடிக்கவில்லை. ஆகவே காந்திஜி ராம நாமம் ஜபிக்க ஆரம்பித்தார். திடீரென்று 'உபவாஸம்' என்ற எண்ணம் உதயமாயிற்று. அந்த எண்ணத்தை அவரால் எதிர்க்க முடியவில்லை. ஆகவே உலகுக்குத் தமது விரதத்தைப் பற்றி அவர் அறிவித்துவிட்டார்" என்று மதுராதாஸ் வாஸன்ஜி என்ற பெரியார் விரத ஆவேசத்தைப்பற்றி பம்பாயில் வர்ணித்திருக்கிறார்.

இப்பொழுதே தமது விரதத்துக்கான பூர்வாங்கங்களைக் காந்திஜி தொடங்கி விட்டாராம். தமது உணவைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக்கொண்டு வருகின்றாராம். ராஜாஜி, ரவீந்திரநாத டாகூர், சரோஜினி, ஜெனரல் ஸ்மட்ஸ் போன்ற பல பேர், காந்திஜி இந்த விரதத்தில் இறங்கலாகாதென வாதித்துப் பார்த்தும் பிரயோசன மில்லாது போயிற்று.

"எனது ஆரோக்கியம் முதல் தரமாகவே யிருக்கிறது. ஏன் பயப்படுகிறீர்கள்?" என்று அப்பன் புன்சிரிப்போடு பத்திரிகை நிருபரிடம் கூறியிருக்கிறார். ஹரிஜனங்களைப் பற்றிய எண்ணமும் பேச்சும் எரவாடா மந்திரத்தில் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. "உபவாச விரதம் என்னையும் என்னைப் படைத்த பகவானையும் சேர்ந்த விஷயமாகும்" என்று ஒரே வார்த்தையில் எல்லோர் வாயையும் காந்திஜி மூடி வருகிறார்.

இதே சமயத்தில் டெல்லியில் அதிகார வர்க்கத்தினர் காந்திஜியை விடுதலை செய்து விடலாமா வென்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்களாம். அந்த வதந்தியை ஒரு நிருபர் சரோஜினி தேவியிடம் கூறிய போது, "விடுதலையைப் பற்றி நமக்கென்ன கவலை. காந்திஜி அதைப் பற்றி துளியேனும் பொருட்படுத்தவில்லையே!" என்று கூறினாளாம்.

ஒரு வேளை காந்திஜி விடுதலை யடைவாராகில் அவர் ஒரு ஹரிஜனச் சேரியில் போய் வாழ்வாரென்றும் தெரிய வருகிறது. விடுதலை கிடைத்தாலும், கிடைக்கா விட்டாலும் அடிகளுக்கு ஆண்டவன் ஆயுளை அருள வேண்டுமென்பது அன்பரின் பிரார்த்தனை.

வெள்ளைக்காரப் 'பைத்தியம்'

காந்திஜி இருபத்தோரு நாள் உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்தவுடன் எரவாடா சிறைச்சாலை உயர்ந்த தெய்வீக உணர்ச்சிகளின் நாடக மேடையாக மாறிவிட்டது. டாக்டர் மார்கரட்ஸ் பெய்கல் என்ற ஜெர்மனிய யூத மாது ஒருவள் அய்யனது வீர சபதத்தைக் கேட்டவுடன் மனம் பதறி எரவாடாக் கோயிலுக்கு ஓடினாள். "உங்களுடன் நானும் பட்டினி கிடப்பேன். உங்கள் அஹிம்ஸா தர்மம் நான் இறப்பதற்கு விடாதபடி உங்களைத் தூண்டும். என்னுயிரைக் காப்பதற்காகவாவது நீங்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட வேண்டி வரும்" என்றாள்.

அவள் உண்ணாவிரத மிருக்கக் கூடாதென்று காந்திஜி கண்டிப்பாகக் கூறித் தடுத்துவிட்டார். ஆனால் டாக்டர் மார்கரீட்ஸ் பெய்கல் அத்துடன் திருப்தி யடைந்துவிடக் கூடியவளாக வில்லை. காந்திஜீயின் அறைக்கு வெளியே யிருந்த தாழ்வாரத்தில் உட்கார்ந்து கொண்டு பிடிவாதம் செய்யத் தொடங்கினாள். ஆஹா! என்ன அன்பு! எத்தகைய பக்தி! காந்திஜீயின் உயிரை விட உயர்ந்த வஸ்து இந்த உலகத்தில் அவளுக்கு வேறென்ன விருக்கிறது?

அன்றிரவு காந்திஜி படுக்கைக்குச் செல்லும் வரை அவள் அந்த இடத்தை விட்டு நகரவேயில்லை. அதைப் போலவே மறுநாளும் அவள் காந்திஜீயைத் தரிசிக்கவும் மறுபடியும் மன்றாடவும் விரும்பிச் சிறைக்கு வந்து விட்டாள். ஆனால் இந்தத் தடவை அவர் அவளது மனத்தை மாற்றி தமது உபதேசத்துக்கு இணங்கச் செய்து விட்டார். முதலில் முரண் பிடித்த குழந்தை பிறகு 'பாபு'வின் சொல்லைக் கேட்டுச் சமத்தாகி விட்டது.

தீர்மானத்தை அவள் மாற்றிக் கொண்டவுடன் காந்திஜி ஹாஸ்யமாக "என்னைப் போல அதுவும் ஒரு பைத்தியம்" என்று கூறிச் சிரித்தார்.

இன்று காந்திஜி இந்தியாவுக்கு மட்டும் சொந்தமான சொத்தல்ல. அவர் இந்த உலகமே சண்டெடுத்த ஒரு புதையல்! தெய்வ உலகத்தினின்றும் வந்திறங்கிய ஒரு ஜோதிக் கிரணம்! அத்தகைய தெய்வீக புருஷனைக் காப்பாற்றி உலகம் க்ஷேம மடையச் செய்யும் பொறுப்பு தொண்டர்கள் கையிலிருக்கிறது.

சீமையில் என்ன இருக்கிறது ?

கூட்டுப் பார்லிமெண்டுக்குப் புறப்பட்ட பூதா சிங் என்பவருக்கு நடந்த மரியாதைகள் நண்பர்களுக்கு ஞாபகமிருக்கும். அவருக்கு ஒரு விருந்து நடத்தப்பட்டது. அழைக்கப் பட்டிருந்தவர்களில் மிகப் பெரும்பாலோர் விருந்துக்கு வரவேயில்லை. இவர் புறப்படும் போது உபசாரம் செய்வதற்காக அநேக மனிதர்கள் கறுப்புக் கொடிகள் தாங்கி இவர் வீட்டு வாயிசில் வெகு நேரம் காத்திருந்தார்கள். இவர் கொல்லை வழியாக வீட்டை விட்டு ஒருவருக்கும் தெரியாமல் கிளம்பி விட்டார்.

இத்தனையும் செய்தாகி விட்டதே. இப்பொழுதாவது விட்டார்களா ? ஷேகுபுரம் என்ற விடத்து சிங்கு சபையார் ஒரு கூட்டம் கூடி, ஒரு தீர்மானம் செய்திருக்கிறார்கள். சிக்கியர்கள், பிரிட்டிஷ் பிரதம மந்திரியின் தீர்ப்புக்கு உட்படுவதில்லை யென்று சத்தியம் செய்திருக்கிறார்களாம். பூதாசிங் அந்த சத்தியத்தை மீறி, இப்பொழுது கூட்டுக் கமிட்டிக்குப் புறப்பட்டு விட்டாராம். ஆகவே அவரை சிங்கு சபையி லிருந்து விலக்கி விடுவதாகத் தீர்மானம் செய்து விட்டார்கள்.

பூதாசிங்கின் ஊக்கமே ஊக்கம் ! அவரது துறவும் வைராக்கியமும் வேறு யாருக்காவது வருமா ? நண்பர்களைத் துறந்து, நாட்டைத் துறந்து, சமூகத்தைத் துறந்து, ஊரைத் துறந்து, மானத்தைத் துறந்து, கொல்லை வழியாக ஓடவும் துணியுமாறு ஆடம்பரத்தைத் துறந்து- இத்தியாதி ஏராளமான பலவற்றையும் துறந்து ஒரே வைராக்கியமாக, லண்டனுக்குப் புறப் பட்டு விட்டார் இவர். இப்படி சர்வ தியாகம் செய்துவிட்டு, இன்னும் எத்தனை 'மகான்கள்' லண்டனுக்கு இவரைப் போலவே கிளம்பி யிருக்கிறார்கள் ! அப்படி ஓட சீமையில் என்ன தான் வைத்திருக்கிறது ?

"ஏனடா ஒரு காரியமுமில்லாமல் குளத்துக் குப் போனாய் ?" என்று கேட்டால், "அடுத் தாத்து சீனு போனானே. நான் மாத்திரம் போகப் படாதோ" என்று சொல்லும் சுப்பு வைப்போல, ஒருவரைப் பார்த்து ஒருவர் கிளம்புகிறார்களே யொழிய, லண்டனில் வேறொன்றும் இருப்பதாக நமக்குத் தெரிய வில்லை.

வீணாய்ப் போன சிங்காரம்

பத்திரிகை நிருபர் ஒருவர் ஒரு மிதவாதியை நோக்கி "வெள்ளைக் கடுதாசியை நீங்கள் மாற்ற முடியாதே. ஏனையா லண்டனுக்குப் போகிறீர்?" என்று கேட்டார். "நான் வேறு என்ன செய்வது? லண்டனுக்குப் போகாவிட்டால், ஜெயிலுக் கல்லவா போகவேண்டும்" என்றார் மிதவாதி. "இரண்டும் வேண்டாம். வீட்டில் சும்மாக் குந்திக் கிடவுமே" என்றார் நிருபர். "நான் அரசியல் தற்கொலை செய்து கொள்ள வேண்டு மென்றல்லவா சொல்லுகிறீர்" என்றார் பயணம் போகிறவர். உயிர்ப் பிணமா யிருப்பதை விட செத்த பிணமாய்ப் போவது நலமென்பது அவருக்குத் தெரிய வில்லை.

சீமை கூட்டுக் கமிட்டிக்குச் செல்லத் தயாராய் முஸ்தீப்புச் செய்து கொண்டிருந்த இன்னொரு மிதவாதியின் சங்கதிதான் வெகு தமாஷானது. டெல்லியிலுள்ள ஒரு பத்திரிகையின் நிருபருக்கு அவர் அடித்த தந்தியாவது:—"கூட்டுப் பார்லிமெண்டு கமிட்டிக்குத் தேர்ந்தெடுத்த பெயர்களோடு எனது பெயர் பத்திரிகைகளில் காணப்படுகிறது. உத்தியோக முறையில் எனக்கு இன்னும் அழைப்பு வர வில்லை. டில்லியில் விசாரியுங்கள். என்னைப் பொறுக்கி யிருக்கிறார்களா இல்லையா என்பதைத் தந்தி மூலம் தெரிவியுங்கள். ரொம்பக் கவலையா யிருக்கிறது."

இந்தத் தந்தியை அடித்த மிதவாதி சும்மா யிருக்கவில்லை. உடனே தையல்காரனிடம் போனார். ஏராளமாக புதிய கால் சராய், கைச் சட்டைகளுக்கு ஆர்டர் கொடுத்தார். மனைவியிடம் சென்று, "கண்ணே! என்னை ராஜா லண்டனுக்கு அழைத்திருக்கிறார். உன்னையும் அழைத்துப் போகிறேன்" என்று சொல்லி விட்டார். ஆனால், கடைசியில் இந்த மனிதரை அரசாங்கம் அழைக்கவில்லை. கூட்டுக் கமிட்டிக்கு இவரைக் கூப்பிடவு மில்லை.

இலவு காத்த கிளிபோல ஏமாந்தார் இந்தப் பேர்வழி. லண்டனில் போட்டுக் கொள்ளுவதற்கு இவர் தைத்த அருமையான புதிய ஸூட்டுகளின் கதி யென்ன? ஹைக்கோர்ட் வக்கீல்கள் அறையில், கோட் ஸ்டாண்டில் தொங்குவதுதானா அவற்றின் தலை யெழுத்து? இதுவாவது கிடக்கட்டுமையா. சம்சாரத்துக்கு அவர் என்ன பதில் சொல்லுவது? லண்டன் என்ற பிருந்தாவனத்தைப் பற்றிய கனவுகளை அவள் மனதில் எழுப்பி விட்டாரே. அதை எப்படி இனி மறக்கும்படி செய்வது? இத்தகைய கஷ்டமான நிலைமைகளில் தான் ஒரு மனிதனிடம் அனுதாபம் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

இன்னொர் மிதவாதிதான் மிக நாணயமானவர். ஒரு பெரிய உத்தியோகஸ்தருக்கு இவர் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். "அன்பு மிக்க ஐயா! கூட்டுக் கமிட்டிக்கு எடுத்திருப்பவர்களைப் பற்றி, தற்காலீக ஜாபிதா ஒன்றைப் பத்திரிகைகளில் பார்த்தேன். அதில் என் பெயரைக் காணவில்லை. அந்தச் செய்தி உண்மையான ஜாபிதாவா யிருக்கும் என்று நான் நம்பவில்லை. என் பெயரைச் சேர்க்க வேண்டும். அதற்கு உங்களையே நம்பி யிருக்கிறேன். நான் மூன்றில் இரண்டு வட்ட மேஜை மகா நாடுகளுக்குப் போய் வந்தவன். மூன்றும் மகாநாட்டைப் பற்றியும் வெள்ளைக் கடுதாசைப் பற்றியும் அநேக பிரசங்கங்கள் செய்திருக்கிறேன். சில சமயம் பெரிய அவமானங்களுக்கும் துணிந்து, என் சமூகத்தாரிடம் மகாநாட்டின் பெருமையை எடுத்தோதி யிருக்கிறேன். முடிவாக ஆட்களை எடுக்கும் பொழுது என்னை மறந்து விடாதீர்கள்." இதுதான் இந்த மிதவாதியின் கடிதம்.

ஆஹா! எவ்வளவு உருக்கமான கடிதம். நாம் இந்தியா மந்திரியாக விருந்தால், கண்டிப்பாக இவருக்கு ஒரு ஸ்தானம் கொடுத்திருப்போம். ஆனால், சாமுயேல் ஹோர் இரக்க மில்லாத மனிதர். இந்த மனிதர் பெயர் இறுதி ஜாபிதாவில் இல்லை. பத்திரிகைகளில் வெளியான ஜாபிதா இவர் நினைத்த மாதிரி வெறும் வதந்தியாக இல்லை; உண்மையாகவே போய் விட்டது.

கப்பல் பிரயாணத்துக்காக, இவர்களைப் போல இன்னும் எத்தனை மிதவாதிகள் கோடித்துக் கொண்டிருந்தார்களோ, என்னென்ன சிங்காரங்கள் செய்து கொண்டிருந்தார்களோ! எல்லாம் கனவாய், கற்பனையாய், கானல் நீராய், பழங் கதையாய்ப் போய் விட்டது வருந்துவதற் குரியது. ஏன், அவர்களுக்கு அழுகை கூடத்தான் வரும். ஐயோ, பாவம்!

ஸ்மட்ஸின் வேண்டுகோள்

ஜெனரல் ஸ்மட்ஸ் என்பார் மகாத்மா காந்தியின் நண்பர். தென்னாப்பிரிக்காவில் மகாத்மாஜி சத்தியாக்கிரக இயக்கம் நடத்திய போது ஸ்மட்ஸ் அங்கு அரசாங்க அதிகாரத்திலிருந்தார். சத்தியாக்கிரகத்தின் பயனாக ஸ்மட்ஸ்-காந்தி ஒப்பந்தம் என்று ஒரு தஸ்தாவேஜு ஏற்பட்டது. அந்த ஜெனரல் ஸ்மட்ஸ் இப்



ஜெனரல் ஸ்மட்ஸ்

போது மகாத்மாஜி 21 நாள் உண்ணா விரதமிருக்கப் போகிறாரென்ற செய்தி கேட்டு திடுக்கிட்டார். அடியிற் கண்ட தந்தியை காந்திஜிக்கு அனுப்பி யிருக்கின்றார்.

"நம்முடைய பழைய நட்பின் காரணமாக தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். எவ்வளவோ பெரிய இயக்கங்களைத் திறமையுடன் நடத்திய தங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். தங்கள் உபவாச விரதத்தை ஒத்தி வைப்பீர்களாக! தீண்டாமை என்ற தீங்கை ஒழிப்பதற்காகத் தாங்கள் தொடங்கிய இயக்கம் எதிர்பார்த்த அளவுக்கு அதிகமாக முன்னேற்றமடைந்துளது. இன்னும் கொஞ்சம் பொறுமையோடிருப்பின் இந்த மகத்தான சீர்திருத்தம் பூர்ணமாக வெற்றியுறும் என்பதில் ஐயமில்லை.

"இந்தியாவில் புதிய சகாப்தம் தோன்றியிருக்கிறது. இதற்கு முன்னை விட அதிகமாக தேச மக்களுக்கு வழி காட்டியாக தாங்கள் இருக்கவேண்டி யிருக்கிறது. இந்த சமயத்தில் தாங்கள் தங்கள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திக் கொள்வதால் மகத்தான நஷ்டம் ஏற்படக்கூடும். நெருக்கடியான இந்த சந்தர்ப்பத்தில் நஷ்டம் சம்பவித்தால் தேசம் பின்னடைந்து போகுமன்றோ!"

உபவாஸச் செய்திகள்

காந்திஜியின் உபவாஸத்தைப்பற்றி அவரது அருமைப் புதல்வர் தேவதாஸ் காந்தி பூனாவிலிருந்து லண்டனிலுள்ள "டெயிலி எக்ஸ்பிரஸ்"ஸுக்கு டெலிபோன் மூலமாய்ச் செய்தி அனுப்பினார்.

மகாத்மா 21 நாள் விரதத்தை வெற்றிகரமாக முடிப்பாரா என்பதைப்பற்றி கவலையா யிருப்பதாயும், கேவலம் நிழல் போல அவர் தேகம் மெலிந்திருப்பதாயும் அவருக்கு பேட்டி காணுதல் முதலான தொந்திர வில்லாமல் பாதுகாக்க எல்லாரும் முயற்சிப்பதாகவும், அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் அறிவுறுத்த வேண்டி மே௴ முதல் தேதி ஆரம்பிப்பதாயிருந்த விரதத்தை 8உ-க்கு மாற்றி யிருக்கிறார் என்றும், ஆயினும் காந்திஜி சந்தோஷமாக விருப்பதாகவும் அதில் கூறி யிருக்கிறார்.

கல்கத்தாவில் நடந்த ஒரு கூட்டத்தில் "இத்தகைய மகாபுருஷர் உபவாஸ மிருக்கும்போது நாம் செய்ய வேண்டுவது என்ன? கீழ்நாடு ஒரு புத்தரை, ஒரு முகம்மதை, ஒரு கிறிஸ்துவைப் பெற்றிருக்கிறது என்பதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். பல நூற்றாண்டுகளுக்கு முன் அப்பெரியார்கள் உலகத்தாரின் எண்ணங்களை சீர்திருத்த வில்லையா" என்று ஸ்ரீமதி நெல்லி சென்குப்தா பேசினார்.

ஹரிஜன தினம்

திருச்சியில் ஹரிஜன மாணவர்களுக்கு எண்ணெய், சோப்பு, சுண்டல், கதர் துணி முதலியவை வழங்கப்பட்டன. திருப்பாணாழ்வார் சரித்திரம் முனிசிபல் ஹாலில் நடித்துக் காட்டப்பட்டது. பந்தயங்களும் நடந்தன.

மதுரையில் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன. சேரிகளை தொண்டர்கள் சுத்தம் செய்தார்கள். வெகு சுத்தமா யிருந்ததற்காக ஒரு ஸ்திரீக்கு புடவை பரிசளிக்கப்பட்டது. சேலத்திலும், விசாகப்பட்டணத்திலும் சேரிகளை ஜாதி ஹிந்துக்கள் சுத்தம் செய்தார்கள்.

சீயாழியில் மேல் ஜாதியார் வாழும் தெருக்களின் வழியே ஊர்வலம் நடந்தது.

திருநெல்வேலியில் இரண்டு இராப் பள்ளிக்கூடங்கள் திறந்து வைக்கப்பட்டன. புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டதாம்.

பல்லாரியில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பாலும், சர்க்கரையும் வழங்கப்பட்டது.

அருண்டவன் கண்ணுக்கு

மூன்று வருடத்துக்கு முன் பெஷாவரில் ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. அதன் பயனுக ஏராளமான உயிர்ச் சேதமும் ஏற்பட்டது. இந்த சம்பவத்தை விசாரித்தறிய திரு. வித்தல்பாய் படேலின் தலைமையில் ஓர் கோஷ்டி சென்றது. விஷயங்களை விசாரித்து அறிக்கை யொன்று வெளியிடப்பட்டது. அவ்வறிக்கை சர்க்கார் மனதுக்குப் பிடிக்கவில்லை போலும். ஆகவே அப்புத்தகத்தை சர்க்கார் பறிமுதல் செய்து விட்டது.

தலைவர்கள் அறிக்கைக்கு ஏதாவது மறுப்பு சொல்லவேண்டுமென அதிகாரிகள் நினைத்தால், அவர்களும் ஒரு மறுப்பு அறிக்கை வெளியிடலாமே யன்றி தலைவர்கள் அறிக்கையை அடாவிடியாக மிதிக்கலாகாது. இவ்வாறு சர்க்கார் பல தடவைகளில் செய்து விட்டால் ஆங்காங்குள்ள குட்டித் தேவதைகளுக்கு உச்சி குளிர்ந்து விடும். கேள்வி கேட்பாரில்லை என்ற எண்ணம் மேலிடும். அதன் பயனுக அக்ரமங்கள் அதிகமாகிவிடும். இதை யெல்லாம் சர்க்கார் உணர்வதில்லை.

சென்ற வருடத்தில் கான்பூரில் ஹிந்து முஸ்லீம் கலவரம் ஒன்று நடந்தது. பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் அதிகமாய் ஏற்படவே தேசியத் தலைவர்கள் திடுக்கிட்டனர். இந்தக் கலவரத்தைப் பற்றி விசாரிக்க ஓர் கமிட்டியை காங்கிரஸ் மகாசபை அநுமதித்தது. அந்தக் கமிட்டியினர் செய்த விசாரணைகளின் பயனுக ஒரு பெரிய அறிக்கையை வெளியிட்டனர். இந்தியாவின் ஹிந்து முஸ்லீம் பிணக்குகளைப் போக்குவதற்கான மார்க்கங்களையும் அப்புத்தகத்தில் கண்டிருந்தனர்.

சர்க்கார் என்ன நினைத்ததோ ஏதோ தெரியவில்லை. ஷை புத்தகத்தைப் பறிமுதல் செய்து விட்டது. போலீஸார் ஷை புத்தகத்தை வேட்டையாடத் தொடங்கி யிருக்கின்றனராம். பொதுஜனத் தலைவர்களின் அறிக்கைக்கு எந்த அரசாங்கமும் தலைகுனிந்து கொடுக்க வேண்டியிருக்க, அவ்வறிக்கையைப் பறிமுதல் செய்கிறது இந்திய அரசாங்கம்! என்னே விபரீதம்! அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது பழமொழி. ஆங்கிலேய அரசின் கண்களுக்கு கடுதாசிகள் அனைத்துமே பேய்களாகத் தோன்றுகின்றன போலும்!

சந்தடியே மிச்சம்

சமீபத்தில் நடந்த இந்தியச் சட்ட சபைக் கூட்டத்தைப் பற்றிய சில ருசிகரமான விஷயங்களை மிஸ்டர் எப். இ. ஜேம்ஸ் சொல்லி யிருக்கிறார். அவற்றைக் கவனித்தால், ஜனங்கள் செலுத்தும் வரிப் பணம் ஒரு காரியமுமில்லாது எவ்வளவு வியர்த்தமாகின்றது என்பது புலப்படும்.

கட்சிகளுக்குச் சரியான தலைவர்கள் கிடையாதாம். அதாவது, கட்டுப்பாடென்பதில்லாமல் எல்லாரும் தான்தோன்றிகளாகக் கிளம்பி விட்டார்களென்பது இதன் அர்த்தம். இது மாத்திர மல்ல, அநேக அங்கத்தினர் தங்களுக்கு லண்டன் அழைப்பு வரவேண்டு மென்று ஆசைப்பட்டுக் கொண்டிருந் திருக்கிறார்கள். அழைப்புக்கு "சான்ஸ்" இருந்தால் சர்க்காருக்கு ஒத்து ஊத ஆரம்பித்தார்களாம். இல்லாவிட்டால், ஆர்ப்பாட்டம் செய்தார்களாம்.

சபைக் கூட்டம் 52 நாட்கள் நடந்திருக்கிறது. 39 மசோதாக்கள் ஆலோசிக்கப்பட்டனவாம். 1220 கேள்விகள் கேட்கப்பட்டனவாம். கேள்வி ஒன்றுக்கு 70 ரூபாய் வீதம் செலவாகி யிருக்கிறது. என்றாலும், 100-க்கு 70 கேள்விகள் கேட்டிருக்க வேண்டியதாகவே இல்லை. ஏனென்றால், சாதாரணமாக ஒரு கடிதம் எழுதினுலே சர்க்கார் தகவல் தெரிவித்திருக்கக்கூடிய கேள்விகளை எல்லாம் அவர்கள் கேட்டார்களாம்.

இவ்வாறு சட்ட சபைக் கூட்டம் வெறும் சந்தையிரைச்சலாக நடந்திருக்கிறதே யொழிய, கணிசமாக ஒரு காரியமும் சாதித்ததாகத் தெரியவில்லை. வெறும் கலாட்டா செய்வதும், விருந்துகள் சாப்பிடுவதும், தெருச் சுற்றுவதுமாக இருந்து விட்டு, சட்ட சபைப் பிரதிநிதிகள் அவரவர் ஊர் திரும்பி விட்டார்கள் ஏதாவது பொறுப்பா, லட்சணமா ஒன்றும் கிடையாது. தமிழ் உபாத்தியாயரிடம் பள்ளிக்கூடப் பையன்கள் நடந்துகொள்ளுவது மாதிரி அவர்கள் போட்டு விட்டு வந்த சந்தடிதான் மிச்சம். அதற்கு மேல் அவர்களால் ஆகக் கூடியதும் ஒன்றுமில்லை. இந்த மாதிரியின் ஆர்ப்பாட்டங்களுக்காக ஏழை இந்தியரின் பதினுயிரக் கணக்கான பணத்தை அள்ளி யிறைப்பதில் என்ன லாபம்? புண்ணியமா, புருஷார்த்தமா?

இந்தியாவின் கட்சி

இந்தியச் சட்ட சபையின் மாஜி தலைவரான விட்டல்பாய் படேலுக்கு அமெரிக்காவில் கவர்னர்கள், மேயர்கள் முதலியவ ரெல்லாம் வைபவமாய் வரவேற்பளித் திருக்கிறார்கள். மோட்டார் மன்னரான ஹென்ரி போர்டு தமது மிக மதிப்புயர்ந்த "லிங்கன்" என்ற மோட்டார்க்காரை அவர் உபயோகத்துக்குக் கொடுத்திருந்தார். தமக்கு முந்தி இந்திய சட்ட சபைத் தலைவரா யிருந்த பிரடெரிக் வொயிட், மாஜி இந்தியா மந்திரி பென் ஆகிய பலருடன் பகிரங்க விவாதங்கள் நடத்தினர். ஒரு கூட்டத்தில் அவர் இந்தி



ஸ்ரீயுத வித்தல்பாய் பட்டேல்

யாவின் கட்சியை எடுத்துரைத்ததன் சுருக்கம் பின்வருமாறு :—

1. உலகத்திலேயே பெருஞ் செல்வம் படைத்திருந்த இந்தியாவில் இன்று தலா நாலைந்து சதங்கள் தான் வரும்படி கிடைத்திருக்கிறது.

2. கல்வியில் தலை சிறந்திருந்த இந்தியாவில் இன்று 100-க்கு 92 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியவில்லை.

3. 4 கோடி ஜனங்கள் தங்கள் பசியைத் தீர்த்துக் கொள்ளவும் முடியாதிருக்கிறார்கள்.

4. உடம்பில் சக்தி யில்லாமல் போனதால், இந்தியர் எளிதில் நோய்க்கு இரையாகிறார்கள். 1918-ம் வருடத்தில் இன்புளுயன்ஸாவால் மூன்றே மாதத்தில் 1,22,50,000 பேர் இறந்தார்கள். சென்ற மகா யுத்தத்தில் கூட இவ்வளவு பேர் மடியவில்லை.

5. இந்தியாவின் மரண விகிதம் 32. அமெரிக்காவிலோ 12. இங்கிலாந்தில் 13.

6. குழந்தை மரண விகிதமோ திடுக்கிடக் கூடியதா யிருக்கிறது. வங்காளத்தில் பிறக்கும் குழந்தைகளில் படிக்குப் பாதி 8 வயதடையு முன் எமலோகம் சென்று விடுகின்றன.

7. குடிசைத் தொழில் நாசம் செய்யப்பட்டு விட்டது.

8. கோடிக் கணக்கானவர் வேலை யில்லாது திண்டாடுகிறார்கள்.

9. குடியரசு முறையில் நடந்த கிராமப் பஞ்சாயத்தை யெல்லாம் அழித்து, அதிகாரத்தை யெல்லாம் அரசாங்கம் கைக்குள் வைத்துக் கொண்டு விட்டது.

10. சென்ற நூற்றாண்டு முடிவு வரையில் இந்தியாவிலிருந்து வெளி நாட்டார் அடித்துக் கொண்டு போன பொருள் 3 கோடி டாலர் மதிப்புடையதாகும்.

11. 1930-32 இந்த இரண்டு வருடங்களுக்கிடையில் மாத்திரம் 2 லட்சம் பேர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். பெஷாவரில் அநேகர் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

12. இந்திய தேசியக் காங்கிரசும், 2000-க்கு மேற்பட்ட சங்கங்களும் சட்ட விரோதமானவை யென்று அறிவித்து விட்டார்கள். ஊர்வலங்களும் கூட்டங்களும் தடுக்கப்பட்டு விட்டன. டஜனுக்கு மேற்பட்ட அவசரச் சட்டங்களை வைசிராய் பிரயோகித்து விட்டார்.

13. இந்தியாவுக்குப் பூரண சுயேச்சையே வேண்டும். பிரிட்டிஷ் மன்னரையும் பார்லிமெண்டையும் நடு நாயகமாய் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு ஏகாதிபத்தியத்துக் குள்ளேயே அடங்கிய குடியேற்ற நாட்டந்தஸ்தை அந்நிய ஜனங்களான இந்தியர் பெற்று வாழ்வ தென்பதெல்லாம் வெறும் கட்டுக் கதையாகும்.

'சண்டைக் கிழுத்ததாக'—

ஒரு தேசம் இன்னொரு தேசத்தை சண்டைக் கிழுத்ததாகவும், நசுக்கியதாகவும் எப்போது கருதுவது? இது விஷயமாக ஜினிவாவில் ஆயுதப் பரிகரண மகாநாட்டில் சில முடிவுகள் செய்திருக்கின்றனர். ஒரு தேசம் இன்னொரு தேசத்தின் கப்பல் போக்குவரத்தைத் தடை செய்தாலும், துறைமுகம் முதலியவைகளைக் கைப்பற்றினாலும், மற்றைய தேசத்தின் இயற்கைப் பொருள்களைச் சுரண்டினாலும் அத்தேசத்தை நசுக்கியதாக அர்த்தமென்று அம் மகாநாடு தீர்மானித்திருக்கிறது.

டிவேலரா கர்ஜனை !

அயர்லாந்தில் டிவாலரா மறுபடி போர் முரசு தட்டிவிட்டான். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தி னிமித்தம் செய்யும் ராஜ விசுவாசப் பிரமா ணத்தை இனிமேல் செய்வதில்லையென ஐரிஷ் சட்ட சபை தீர்மானித்து விட்டது. அன்று டிவாலரா பேசியபோது "அடிமைத் தனத் துக்கு அறிகுறியாயுள்ள அனைத்தையும் அழித்தே திருவோம். அயர்லாந்தின் உரிமை அனைத்தையும் காப்போம். ஐரிஷ் கோர்ட்டு களுக்கு மேலே பிரிவிகவுன்ஸிலுக்குச் சென்று வழக்குத் தொடுக்கும் வழக்கத்தைத் தொலை த்து விடுவோம். அயர்லாந்து குடியரசாக மாறியே திரவேண்டும்." என்று கர்ஜித்தான்.

'கோரம்' இல்லை ! கோரமில்லை !

சென்னையிலிருந்து ஒரு வாலிபச் சாரணரை கில்வால் பார்க்குக்கு அனுப்ப வேண்டுமாம். அங்கிருந்து அவர் புடாபெஸ்டுக்குப் போவா ராம். இதற்கு 1500 ரூபாய் வேண்டுமாம். இந்த விஷயம் சென்னைக் கார்ப்பொரேஷனில் வந்தது. சாப்ரூ, ஜெயகர் முதலிய பெரிய மனி தர்களுக்கெல்லாம் கப்பல் பிரயாண சுகம் கிடைத்திருக்கும் பொழுது, வாலிபர் மாத்திரம் சும்மா யிருக்கலாமா? ஆனால் திரு. சத்திய மூர்த்தி இதை ஆட்சேபித்தார். கல்வி நிதியை இப்படிக் கண்டபடி வாரி யிறைக்கக் கூடாதென் பது அவர் கட்சி. இந்தக் கட்சி எடுபடாது போலிருந்தது. உடனே அவரும் இன்னொரு வரும் வெளியேறி விட்டார்கள். மற்றவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு உள்ளே உட்கார்ந்திருக்கையில் வெளியிலிருந்து சில கவுன்ஸிலர்களின் சத்தம் கேட்டது. "கோரம் இல்லை, கோரம் இல்லை" என்பது தான் அந்த சத்தம். அதாவது, கூட்டத்தை நடத்துவதற்கு கவுன்சிலில் குறைந்தது எவ்வ ளவு அங்கத்தினர்கள் வேண்டுமோ அவ்வளவு பேர் உள்ளே இல்லையாம். 'கோர'மில்லாத காரணத்தினால் வேறு கோரங்கள் நடை பெறாது கூட்டம் கலையவேண்டிய தாயிற்று.

குல்னா காங்கிரஸ் மாஜி சர்வாதிகாரி ஸ்ரீமதி சசிலா சௌத்ராணி என்பவருக்கு அச்சுக்கூட சட்டப்படி 6 மாதம் காவல்.

சட்ட மறுப்பு

கிராமப் பிரசாரம்

மதுரையிலிருந்து கிராமப் பிரசாரம் செய்வ தற்காக முன்பு 5 கோஷ்டிகள் புறப்பட்டு கைது செய்யப்பட்டனர். இப்பொழுது 6 வது கோஷ்டி புறப்பட்டிருக்கிறது.

தண்டனை

மதுரையைச் சுற்றியுள்ள கிராமங்களில் வரி கொடா இயக்கப் பிரசாரம் செய்த ராஜ கோபாலய்யங்காருக்கு 100 ரூ. அபராதமும், 6 மாதமும். வேறு இருவருக்கு தலா 25ரூ.யும், ஆறு மாதமும்.

சென்னை ராஜதானியில் ஏப்ரல் மாதம் பிற் பாதியில் சட்ட மறுப்பு இயக்க சம்பந்தமாக தண்டனை யடைந்தவர்கள் 43 பேர்.

கல்கத்தாவில் போக்ரா ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் சர்வாதிகாரி டாக்டர் அப்துல் காதர் சௌத்திரிக்கு 4½ மாதம் கடுங்காவல் தண்டனை.

குல்னாவில் கிஷோரி மோகன் சட்டர்ஜி, (சர் வாதிகாரி) டாக்டர் கானிபாத்பாய், இன்னும் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வீடுகளும் சோதிக்கப்பட்டன.

ஆமதாபாத்தில் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டில் குஜராத் சர்வாதிகாரியான ஒரு தொண்டர், மாஜிஸ்திரேட்டின் ஆசனத்திலமர்ந்து, மாஜிஸ் திரேட்டும் இதர சர்க்கார் ஊழியர்களும் கைது செய்யப்படவேண்டு மென்றும், எல்லா ராஜீயக் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டுமென்றும் கூறினாராம். உடனே அவர் அப்புறப் படுத் தப்பட்டு கைது செய்யப்பட்டார்.

தடை யுத்திரவு

பம்பாயில் வெளியாகும் "பிரீ பிரஸ் ஜர்னல்" என்னும் பத்திரிகையில் அறிக்கைகள், போட் டோக்கள், காங்கிரஸ்காரர்களின் நடவடிக்கை கள் முதலியவற்றைப் பிரசுரிக்கக் கூடாதென்று முன்னம் அறிவிக்கப் பட்டிருந்ததை மறுபடி யும் மறு உத்திரவு வரையில் பிரசுரிக்கக் கூடா தென்று ஊர்ஜிதம் செய்து அதன் சொந்தக் காரருக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள்.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.